செய்தி வெளியீடு எண்– 6 நாள்– 04.01.2010

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>கோவையில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி;</u>
## <u>கோவை – உக்கடம், அம்மன்குளம் பகுதிகளில் 118 கோடி ரூபாய்ச் செலவில்</u>

## <u>புதிதாக 3 ஆயிரத்து 840 அடுக்குமாடிக் குடியிருப்புகள்! அடிப்படைக்கட்டமைப்பு வசதிகள்!</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>

கோவையில் 2010 ஜுன் திங்களில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி, ஜவகர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக நகர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் எனும் திட்டத்தின்கீழ் கோவை –

உக்கடத்தில் 68 கோடி ரூபாய்ச் செலவில் 2 ஆயிரத்து 232 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும்;

அம்மன்குளம் என்ற இடத்தில் 50 கோடி ரூபாய்ச் செலவில் 1608 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும்

மொத்தம் 118 கோடி ரூபாய்ச் செலவில் 3 ஆயிரத்து 840 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.